2022 ජූලි 25
2022 யூலை 25
25th July 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

## 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

**එකොළොස් වන කාණ්ඩය - 01**
பதினோராவது தொகுதி - 01
Eleventh Volume - 01

**ස්වාධීන කොමිෂන් සභා**
சுயாதீன ஆணைக்குழுக்கள்
Independent Commissions

**ජාතික විගණන කාර්යාලය**
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



| தலைப்பு<br>------------ | நிறுவனம்<br>------------ | பக்கம்<br>------ |
|---|---|---|
| - | முகவுரை | 1 |
| 6<br>7 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்<br>நீதிச் சேவை ஆணைக்குழு | 2<br>2-5 |
| 8 | தேசிய பொலீஸ் ஆணைக்குழு | 5-7 |
| 9 | நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை | 8 |
| 10 | இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 9-10 |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 11 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 11-16 |
| 20 | தேர்தல்கள் ஆணைக்குழு | 17-20 |
| 25 | எல்லை நிர்ணய ஆணைக்குழு | 21 |
| 302 | கூட்டுறவு ஊழியர்களின் ஆணைக்குழு | 22-24 |
| 335 | தேசிய கல்வி ஆணைக்குழு | 24-26 |
| | பிண்ணினைப்பு | 27-29 |

# முகவுரை

இலங்கையில் தற்போதுள்ள பதினொறு சுயாதீன ஆணைக்குழுக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. தனித் தனியாக அவ் நிறுவனங்களுக்கு தொடர்புடையதாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரியதாக இனங்காணப்பட்ட அறிக்கை திகதிக்கு தீர்க்கப்பட்டிராத முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தலைப்பிற்கு (ஆணைக்குவிற்கு) தொடர்புடைய 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் ஒதுக்கீட்டுச் சட்டங்களினால் கிடைக்கப்பெற்ற ஆரம்ப நிதியேற்பாடு, ஆண்டின் இறுதி தேறிய நிதியேற்பாடு, அவ் அவ் ஆண்டுகளின் உள்ளவாரான செலவினம் மற்றும் ஆண்டு இறுதி சேமிப்பு மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களாக தனித்தனியாகவும், அவற்றின் கூட்டுத்தொகையும், மேற்படி ஆண்டுகளில் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கணக்காய்வு அபிப்பிராயமும் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணை 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

விசேடமாக இந்த ஆணைக்குழுக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் நிதியேற்பாடு மூலதன நிதியேற்பாட்னை பார்க்கிலும் அதிக பெறுமதியினை கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும் வருடாந்தம் வேலைத் திட்டங்கள் தயாரித்தல், அதற்கமைய நடவடிக்கைகளை வழிநடத்தல் மற்றும் ஆண்டு இறுதியில் அதற்குரிய செயன்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் ரீதியில் சுயாதீன ஆணைக்குழு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் சில ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளாமையும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தேவையான தகவல்கள் பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான தரவுகள் சேர்ப்பதற்கு முடியாத மட்டத்தில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. மேலும் தமது விடய பரப்பிற்கு உகந்த வகையில் சட்டங்கள் அல்லது வேறு சட்டரீதியான ஏற்பாடுகள் தயாரிப்பதற்கு சில நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 11 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு தொடர்புடைய 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்திற்கான தேறிய நிதியேற்பாடு முறையே ரூபா 8,117,242,000 உம், ரூபா. 6,588,236,800 உம் மற்றும் ரூபா. 11,765,151,000 ஆக காணப்பட்டதுடன் அவ் ஆண்டுகளின் மொத்த உள்ளவாரான செலவினம் முறையே ரூபா. 5,630,125,061 உம், ரூபா. 5,602,215,410 மற்றும் ரூபா. 9,250,313,521 ஆக காணப்பட்டது. சரியான நேரத்தில் பணம் கிடைக்கப்பெறாமை அல்லது நிறுவனம் காலத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்காமையினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் மொத்த நிதியேற்பாட்டில் சேமிப்பு முறையே ரூபா. 2,487,116,939 , ரூபா. 986,021,390 மற்றும் ரூபா. 2,514,837,479 ஆக காணப்பட்டதுடன் அப் பெறுமதிகள் ஒட்டுமொத்த பாதீட்டு மாறுப்பாடுகளுக்கு அவ் ஆண்டுகளிலேயே தாக்கமளித்திருந்தது.

**தலைப்பு 6 – அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்**

பொருண்மையான அவதானிப்புக்கள் காணப்படவில்லை.

**தலைப்பு 7 – நீதிச் சேவை ஆணைக்குழு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | **2020** | | | |
| 1. | 2020 திசெம்பர் 31 இல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 185,000 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை கடன் மீதி சுற்றறிக்கை பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய கடன் மீதிகள் உரிய வண்ணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இதுவரையில் நிலுவை கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 2. | ரூபா 2,500,000 பெறுமதியான Jaguar வகையான மோட்டார் வாகனமொன்று 03 வருட காலத்திலிருந்து விளைவற்று காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 03 சந்தர்ப்பங்களின் போது டெண்டர் அழைக்கப்பட்டு விற்பதற்கு முயற்சி செய்த போதிலும் மதிப்பீட்டு விலைக்கு கூறுவிலைகள் முன்வரவில்லை. | கைதவிர்ப்பு அல்லது விற்றல் இது வரையில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அலுவலகத்தின் 16 பதவிகளில் 77 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 08 பதவிகளில் 24 உத்தியோகத்தர் மிகையாக காணப்பட்டனர். | பதவியணியினர் முறையான வகையில் பேணப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கை 117 ஆகும். 2021.12.31 இற்கு உள்ளவாரான ஊழியர் எண்ணிக்கை 69 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து காணப்படும் உத்தியோகத்தர்களினால் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளின் கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. | பதவியணி முறைப்படுத்துவதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. |

**<u>2019</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 (5.6) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனுக்கள் கோரப்படும்போது தயாரிக்கப்படுகின்ற மனுக்களுக்கான அழைப்பு ஆவணத்தில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்களின் விபரக் குறிப்புக்கள் திட்டவட்டமாக காண்பிக்கப்படாதிருந்த துடன், 2019 யூலை 19 ஆந் திகதி பதிவுத் | அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 (5.6) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படு-கின்ற பொருட்களுக்கான விவரக் குறிப்புக்கள் திட்டவட்டமாகக் காண்பிக்கப்பட வேண்டியமை. | பொருத்தமற்ற பொருட்கள் கொள்வனவு செய்வதில் அரசிற்கு ஏற்படக் கூடிய நட்டம் தவிர்த்துக் கொள்வதற்காக பிழை இனங்காணப்பட்ட சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கையின் போது பெறுகை வழிக்காட்டி கோவை 2006 (5.6) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தபாலில் அனுப்பப்பட்ட மனுப் பத்திரங்களில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வளிப்பதனாக்கிகளில் மாதிரி திட்டவட்டமாக காண்பிக்கப்படாது 2019 யூலை 30 ஆந் திகதி பக்ஸ் செய்தியினுடாகத் தேவையான மாதிரி மனுதாரர்களுக்கு காண்பிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | | | |
| 5. | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமிற்கு உரித்தற்ற நீதிமன்றப் பதிவாளர் பதவிக்காக 05 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டி-ருந்தனர். | தேவையின் பிரகாரம் பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்டுவதற்-கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 04 உதவிச் செயலாளர் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் இந்த நீதிமன்ற பதிவாளர் சேவையின் உத்தியோகத்தர்க-ளினால் நிரப்பப்படுவதற்கு நடடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற பதிவாளர் பதவிகள் முகாமைத்துவ சேைவகள் திணைக்களத்தின் ஊடாக அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | இது வரையில் குறித்த பதவிகள் அங்கீகரித்தல் இடம்பெற்றிருக்க-வில்லை. |

**2018**

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 (i) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க-வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றை நியமிப்பதன் மூலம் உரிய காலப்பகுதிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். | நிறுவனத்தினுள் நிதி ஒழுக்காறு முறையாக பேணிச் சென்று அரச நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகள் நிதி பிரமாணம் மற்றும் குறித்த சுற்றறிக்கைகள் பிரகாரம் சிறந்த முகாமைத்துவத்துடன் முறையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டு குறித்த குழு தாபிப்பதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. |

<u>**தலைப்பு 8 – தேசிய பொலீஸ் ஆணைக்குழு**</u>

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| | ---------------------------- | ------------------------ | --------------------------- | --------------------- |
| 1. | அரசியலமைப்பின் 20 ஆவது சீர்திருத்தத்தின் பிரகாரம் 47 ஆம் அரசியலமைப்பின் 155 ஊ இன் கீழ் ஆணைக்குழுவினால் பொதுமக்கள் உறுப்பினரிடமிருந்து அல்லது ஏதாவது அதிருப்திக்கு உள்ளான ஒருவரிடமிருந்து பெறப்படுகின்ற முறைப்பாடுகளை | 20 ஆம் அரசியலமைப்பில் பணிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பிரகாரம் நடைமுறை விதி தாபிப்பதற்கு விதிகள் உருவாக்கப்படல் வேண்டும். | முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் விசாரணை மேற்கொள்ளுவதற்கான நடைமுறை விதி தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற-துடன் அதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்-குரியதாக சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. | இது வரையில் குறித்த விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக் கொள்வதற்காகவும் விசாரணையை மேற்கொள்வதற்காகவும் நடைமுறை விதி தாபிப்பதற்கான விதிகளை பெற்றுக் கொள்ள முடியுமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் 2021 மார்ச் 28 ஆந் திகதி வரை அந்த விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை. | | | |
| 2. | பொலீசினால் நடவடிக்கை எடுக்காமை, அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் மற்றும் பக்கச்சார்புடைமை தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படுதல் கடந்த வருடத்தினை போன்றே 2020 ஆம் ஆண்டிலும் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை நூற்றிற்கு 80 ஐ விஞ்சியிருந்தது. கடந்த வருடத்திற்கு நிகராக பொருண்மையான அதிகரிப்பொன்று | ஆணைக்குழுவிற்கு பெறப்படுகின்ற முறைப்பாடுகள் விசாரிப்பதற்கு முறையான வேலைத்திட்டம் பயன்படுத்தப்படல் வேண்டும். | அவதானிப்புக்கள் சரியானதாக இருந்தாலும் 2021.02.28 ஆந் திகதியாகும் போது முறைப்பாடுகள் தீர்க்கப்படும் சதவீதம் சாதாரணமாக 80 % வரை அதிகரித்திருந்தது. இந்த தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக விபரமான தகவல்களை முறைப்பாட்டாளர்களிட-மிருந்தும் பெறப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் பெரும்பாலாக காணப்படுகின்றன. அவ்வாறான தகவல்கள் பெறப்படுதல் தாமதமாதல் | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெற்றப்பட்ட பொதுமக்களின் முறைப்பாடுகளில் 2021 திசெம்பர் 31 லரையிலும் விசாரணை முடிவுறுத்தப்படாத மொத்த முறைப்பாடுகள் எண்ணிக்கை 476 ஆகும். அதில் பொலீஸ் செயற்படாதவை தொடர்பில் 192 முறைப்பாடுகளும் அதிகாரத்தினை முறையற்ற விதத்தில் |

காணப்பட்டது.
அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் தீர்க்கப்படுதல் சதவீதம் கடந்த வருடத்தில் நூற்றிற்கு 77 ஆக காணப்பட்ட போதும் இந்த வருடத்தில் நூற்றிற்கு 68 வரை குறைவடைந்திருந்தது.
அத்தோடு, பக்கச் சார்புடைமை தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படுதல் கடந்த வருடத்திற்கு நிகராக நூற்றிற்கு 92 இனால் அதிகரித்திருந்தாலும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் நூற்றிற்கு 83 இல் இருந்து 74 வரை குறைவடைந்திருந்தது

காரணமாக அதற்குரிய விசாரணைக்காக ஒரு குறிப்பிட்ட அளவு காலமொன்று செலவாகின்றது. அதனால் பொலீஸ் அறிக்கைகள் தாமதமாகல் காரணத்தினால் அவ்வாறான விசாரணை நடவடிக்கைகளுக்காக தாமதமொன்று ஏற்பட்டிருந்தது.

பயன்படுத்தல் தொடர்பாக 112 முறைப்பாடுகளும் பக்கச்சார்புடையமை தொடர்பில் 88 முறைப்பாடுகளும் காணப்பட்டன.

தலைப்பு – 09 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | 2018 ஆம் ஆண்டு ஆரம்பத்தின் போது 958 மேன்முறையீடுகள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், ஆண்டின் போது 424 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. 17 மேன்முறையீடுகள் மீண்டும் கோரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 1399 ஆக இருந்தன. 2018 ஆம் ஆண்டில் 520 மேன்முறையீடுகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 879 மேன்முயைீடுகள் எதிர்வரும் ஆண்டில் தீர்வு செய்யப்பட வேண்டியிருந்தன. | மேன்முறையீடுகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 929 மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு காணப்பட்டது. 2021 செப்தெம்பர் 30 இல் 111 மேன்முறையீடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு காணப்பட்ட மொத்த மேன்முறையீடுகள் 1040 ஆகும். 2021 செப்தெம்பர் 30 வரையிலும் அதில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது 42 மேன்முறையீடுகளின் நடவடிக்கைகள் மட்டுமாகும். |

**<u>தலைப்பு 10 - இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2,597,130 க்கான சுற்றிவளைப்பு முற்பணம் தொடர்பான வழக்கு தீர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2021 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் அம்மிகுதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இலஞ்சமாக பயன் படுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப்படும் முற்பணத்தினை வழக்குப் பொறுப்பான அதிகாரியிடம் அவ் வழக்குகள் முடிவுற்று வழக்குத் தீர்ப்புக்கள் வெளியாகும் வரை நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் சிராபரிக்கு தீர்க்கப்படல் வேண்டும். | நிறைவு செய்யப்பட்ட வழக்குகளுக்கு தொடர்புடைய கோவைகள் கொண்டு வரப்படுவதற்காக குறித்த பிரிவு மற்றும் சட்ட உத்தியோகத்தர்க-ளிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. | 2021.12.08 இல் தீர்க்கப்பட வேண்டிய சுற்றிவளைப்பு முற்பண மீதி ரூபா 2,086,780 ஆக காணப்பட்டது. |
| 2. | வழக்கு தீர்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்திருப்பினும் சில கோவைகளுக்குரிய வழக்கு சார் பொருட்கள், வழங்கு சார் பொருட்கள் அதிகாரி பொறுப்பில் காணப்பட்டது. | நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் வழக்குத் தீர்ப்பு கிடைக்கப் பெற்றதன் பின் அல்லது மேன்முறையீடு முடிந்ததன் பிறகு அக் கோப்புக்களுடன் தொடர்புடைய வழக்குச் சான்றாக பொருட்கள் அதிகாரியினது பொருள் மிகுதியினுள் காணப்படும் பொருட்களை ஏடுகளிலிருந்து நீக்கப்படல் வேண்டும். | கைதவிர்த்தல் குழுவொன்று நியமிப்பதற்கு மற்றும் வழக்கு பொருள் ஆய்வின் போது பெற்றுக் கொடுக்கும் பரிந்துரைகளுக்கு பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்-டுள்ளது. | இது வரையில் வழக்கு பொருட்கள் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 2016 மார்ச் 01 திகதி நடந்த பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவின் மூலம் இலக்கம் 36/69/சீ கொண்ட மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள நிலத்தினை ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொடுப்பதற்கு 2016 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் அதன் சட்டரீதியான உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு 2020 திசெம்பர் இறுதி திகதி வரையிலும் முடியாது போய் இருந்தது. | நிலத்தின் சட்ட ரீதியான உரிமை உறுதி செய்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் கோரப்பட்டுள்ளது. | இன்னும் கையகப்படுத்தப்-படவில்லை. |
| 4. | 2020 திசெம்பர் 31 க்கு உள்ளவாறான சிவில் பணிக் குழாமில் 425 வெற்றிடங்கள் மற்றும் விசாரணைப் பிரிவு பணிக் குழாமில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அத்தியாவசியமான பதவிகளுக்கான வெற்றிடங்கள் முறையாக பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் சிவில் பணிக்குழாமில் 24 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் சிவில் பணிக் குழாமில் 411 வெற்றிடங்கள் மற்றும் விசாரணை பிரிவு பணிக் குழாமில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. |

**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டம் தயாரித்தலானது மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்மொழியப்பட்ட சட்டம் தயாரித்தல் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைவுத் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. | சட்டம் தயாரிக்கும் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**தலைப்பு 13 - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | 2018 | | | |
| 1. | ஆணைக்குழுவின் 04 கிளை அலுவலகங்களினால் 2018 சனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய மாதாந்த வேலைத் திட்ட அறிக்கை (Work Plan) மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் செயன் முன்னேற்ற அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேலைத் திட்ட அறிக்கை (Work Plan) மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் செயன் முன்னேற்ற அறிக்கை மாதாந்தம் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கிளை அலுவலகங்க-ளுக்கு மாதாந்தம் வேலைத் திட்டங்கள் தயாரிப்பதற்கு ஆலோசனை கொடுக்கப்பட்-டுள்ளது. | சில பிரதேச அலுவலகங்களின ால் இந்த அறிக்கை தலைமை அலுவலகத்-திற்கு சமர்ப்பிக்கப்பட்டிரு-க்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | உள்ளகக் கணக்காய்வு பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் இந்த பதவிக்காக உள்ளக ரீதியில் விண்ணப்ப படிவங்கள் அழைக்கப்பட்டிருப்-பினும் விண்ணப்பதாரிகள் தகமைகளை பூர்த்தி செய்திருக்க-வில்லை. | இன்னும் இந்த வெற்றிடம் நிரப்பப்பட்டி-ருக்கவில்லை. |
| | 2019 | | | |
| 3. | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டத்தின் 15 (8) பந்தியின் பிரகாரம் பரிந்துரையொன்று அனுப்பப்பட்டு ஓர் அதிகாரசபை அல்லது ஒரு தனிநபர் அல்லது நபர்களினால் அந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதை மீறியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது அந்த நபரினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு, | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பரிபூரணமான அறிக்கையொன்று சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தவறிழைத்தோர் பட்டியல் தயாரித்து சனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழு நிர்வாக ரீதியான தீர்மானமொன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. | ஆணைக்குழுவின ால் இது தொடர்பான பரிபூரண அறிக்கை-யொன்று இது வரையில் சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்-டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழுவின் பரிந்துரையை செயற்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் கருத்தின் அடிப்படையில் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவினால் அந்த விடயங்கள் சம்பந்தமாக பரிபூரணமான அறிக்கையொன்று சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 4 | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களும், ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களினதும் பட்டியல்களும் அந்த விடயங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டு 2016 ஆம் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2016, 2017 மற்றும் 2018 இன் அறிக்கைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை தீர்மானம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 வரை செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்-தில் சமர்ப்பிக்கப்பட்டிரு-க்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 5. | ஆணைக்குழுவின் நீண்ட வேலைகளின் பின்னர் தரப்படுகின்ற பரிந்துரையை நடைமுறைப்படுத்தாமல் காணப்பட்டதுடன், ஆணைக்குழுவினால் தரப்படுகின்ற பரிந்துரை ஏனைய நிறுவனங்களுக்குரிய சட்டங்கள், விதிகளுடன் பொருந்தாத சந்தர்ப்பங்கள் மற்றும் சமனான பரிசீலனை நடாத்துகின்ற நிறுவனங்களின் பரிந்துரையுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பரிந்துரை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், ஏனைய நிறுவனங்களுக்கு தாக்கமளிக்கும் சட்டங்கள் மற்றும் சமனான பரிசீலனை நடத்தும் நிறுவனங்களின் பரிந்துரையுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்களினை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | அவதானிப்பு அவ்வண்ணமே காணப்படு-கின்றது. |
| 6. | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் இலங்கை பொலீசுக்கு 50 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 45 பரிந்துரைகளும் கல்வி அமைச்சிற்குரிய 90 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 36 பரிந்துரைகளும் | குறுகிய காலத்திற்குள் பரிந்துரைகளை வழங்குவதற்கும், அந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | அவதானிப்பு தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கை நாளதுவரையாக்-கப்பட்டி ருக்கவில்லை. | 2022.01.31 இல் கல்வி அமைச்சிற்-குரியதாக செயற்படுத்தப்ப-ட்டிராத 36 பரிந்துரைகளில் 03 உம், ஓய்வூதிய திணைக்களத்-திற்குரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஓய்வூதிய திணைக்களத்திற்கு உரிய 07 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 06 பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்க வில்லை. இந்த பரிந்துரைகளை வழங்குவதற்கு 06 மாதங்களுக்கும் 06 வருடங்களுக்கும் இடையிலான காலம் செலவிடப்பட்டிருந்தது. | | | செயற்படுத்தப்பட் டிராத 06 பரிந்துரைக-ளில் ஒன்றும் செயற்படுத்தப்ப-ட்டிருந்தது. இலங்கை பொலீசுக்குரிய செயற்படுத்தப்பட்-டிராத 45 பரிந்துரைகளும் இதுவரையில் செயற்படுத்தப்பட்-டிருக்கவில்லை. |
| 7. | ஆணைக்குழுவினால் 2017 – 2019 காலப்பகுதிக்குரிய தயாரிக்கப்பட்ட உபயமார்க்கத் திட்ட அதிகாரச் சட்டத்தின் பலவீனங்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது திருத்தப்படுவதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சட்டத்தினை திருத்திவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திருத்துவது கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றது. | சட்டம் திருத்தப்பட்டிருக்க -வில்லை. |
| 8. | கடந்த ஆண்டில் 4,266 முறைப்பாடுகள் உட்பட 2020 ஆண்டில் தீர்க்கப்பட வேண்டி இருந்த 10,550 மொத்த முறைப்பாடுகளில் 3,812 இனை சீராக்கப்பட்டு மீளாய்வு ஆண்டு இறுதியில் 6,738 மிகுதி இருந்தன. | முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கான துரித வேலைத் திட்டமொன்றினை தயாரிக்கப்படல் வேண்டும். | நாளதுவரையாக்க ப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆணைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 2021.12.31 இல் 7,699 முறைப்பாடுகள் தீர்க்கப்படுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இவைகளில் 23 முறைப்பாடுகள் 10 வருடங்களுக்கு மேற்பட்டனவாகவும் 1,804 முறைப்பாடுகள் 3 வருடம் முதல் 10 வருடங்களுக்கு இடையில் கிடைத்தவைகளாகவும் இருந்தன. | | | காணப்பட்டதுடன் அதில் 30 முறைப்பாடுகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தினுள்ளும், 1860 முறைப்பாடுகள் 3 தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் பெறப்பட்டவை-யாகும். |
| 9. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு 95 பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன், 04 பணிப்பாளர், ஒரு பிரதிப் பணிப்பாளர், 12 சட்ட அதிகாரிகள், 23 மனித உரிமைசார் அதிகாரிகள், மற்றும் 02 பிராந்திய ஒருங்கிணைப்பாளர் அதில் உட்பட்டிருந்தனர். அது போன்றே நிரந்தர அடிப்படையில் அதிகாரிகள ஆட்சேர்க்கப்படாமல் பதில் கடமை அடிப்படையில் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் 05 அதிகாரிகள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | 24 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 இல் 69 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. 04 பணிணப்பாளர்கள், 03 பிரதி பணிப்பாளர்கள், 13 சட்ட அதிகாரிகள், 29 மனித உரிமைசார் அதிகாரிகள் அதில் உள்ளடக்கப்பட்டி-ருந்தனர். |

**<u>தலைப்பு 20 – தேர்தல்கள் ஆணைக்குழு</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | ----------------------- | -------------------- | ----------------------- | ------------------------ |
| | 2019 | | | |
| 1. | தேர்தல்கள் முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் கணனி முறைமையைத் தயாரித்தல் மற்றும் அதிலுள்ள mobile app இனை உருவாக்கும் செயற்பாட்டிற்காக அரச பாதுகாப்பு அமைச்சிற்கு முறையே ரூபா 1,952,500 மற்றும் 325,000 ஆன தொகை 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருநதது. அச்செயற்பாடு 2018 மார்ச் இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பினும் அச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்க-வில்லை. | உரிய செயற்பாட்டை முடியுமான அளவு விரைவாக முடிவுறுத்த வேண்டும். | உரிய முறைமையின் குறைப்பாடு தீர்க்கப்பட்டு தருமாறு அரசாங்க பாதுகாப்பு அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க பாதுகாப்பு அமைச்சினால் தயாரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த தேர்தல்கள் முறைப்பாடுகள் புலனாய்வு செய்யும் கணனி முறைமை மற்றும் mobile app 2022 சனவரி 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை. |
| 2. | யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக புதிய ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விரைவாக வேலையை நிறைவு செய்யுமாறு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | இந்த பணி இது வரையில் நிறைவு செய்யப்பட்டிருக்க-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்ப புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 01 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் வேலைகள் ஆரம்பிக்க வேண்டிய திகதியின் பின்னர் 06 மாதங்கள் கடந்து நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த-துடன் முற்பணமாக ரூபா 12.42 மில்லியன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு 3½ மாதங்களுக்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| 3. | 2019 ஆம் ஆண்டில் குத்தகை காலம் முடிவடைந்த 09 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | குத்தகை காலம் முடிவடைந்த வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கையேற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இது வரையில் 05 வாகனங்கள் மட்டும் கையேற்கப்பட்டிருந்தது. |
| | 2020 | | | |
| 4. | ஆணைக்குழுவிற்கு சொந்தமான ஆதனமொன்றிற்கு மெட்றோ கொழும்பு | திருத்துவதற்கு உகந்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | இதுவரையில் திருத்தப்பட்டிருக்க-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நகர அபிவிருத்தி திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்த ருபா 5,200,000 ஆன மாற்று தங்குமிடம் மற்றும் தற்காலிக வாடகை கூலி கொடுப்பனவு ஆணைக்குழுவின் தலைவர் உறுப்பினரொருவர் மற்றும் இரு அதிகாரிகளினால் தனிப்பட்ட ரீதியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| 5. | 2016 யூலை 05 முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானம் மற்றும் பாராளுமன்றத்தில் அங்கிகரிக்கப்பட்ட பிரேரணையின் படி ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு தமது வதிவிடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்கு செல்வதற்கு உள்ள தூரம் கி.மீ 350 க்கு கூடுதலாக இருப்பின் ரூபா 50,000 க்கான பிரயாண கொடுப்பனவு | அமைச்சரவின் தீர்மானம் மற்றும் பாராளுமன்ற அங்கிகார பிரேரணையின் படி செயற்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | இதுவரையில் திருத்தப்பட்டிருக்க-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உரித்துள்ளதாக இருப்பினும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொதளாதார வாடகை செலுத்திக் கொண்டு வந்திருந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு 04 ஆண்டு காலத்திற்காக ரூபா 2,400,000 க்கான பிரயாணக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| 6. | ஆணைக்குழுவிற்கு சொந்தமில்லாத காணியில் ரூபா 1,771,701 செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டி-ருந்தது. | ஆணைக்குழுவிற்கு உரித்தான காணிகளின் சட்டரீதியான உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இதுவரையில் காணி கையேற்கப்பட்டிருக்க-வில்லை. |

**தலைப்பு 25 – எல்லை நிர்ணய ஆணைக்குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | 2019 | | | |
| 1. | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 15,875,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான மொத்த செலவினம் ரூபா 12,849,555 ஆகும். சட்டவாக்க நிறுவனத்தினால் தற்போது திட்டவட்டமாக பணியொன்று ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 12,849,555 ஆன செலவினத்தின் செயலாற்றல் தொடர்பில் திருப்தியடைய முடியாதிருந்தது. | நிறுவனத்திற்காக திட்டவட்டமான பணிப்பொறுப்-பொன்று காணப்பட வேண்டும். | சனாதிபதி செயலாளர் மற்றும் புதிய அரசியலமைப்பு வரைவு தயாரித்தல் குழுவிற்கு அவ்வப்போது இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 20 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலமாகவும் உரிய பணிப்பொறுப்-பொன்று பணிக்கப்பட்டிருக்க-வில்லை. |
| | 2020 | | | |
| 2. | ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்டத்தில் இரு பதவிகளுக்காக 2017 மார்ச் 21 ஆந் திகதியிலிருந்து பதில் கடமை அடிப்படையில் இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பல வருடங்களாக இரண்டாம் நிலையில் 05 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடம் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | தற்போதும் இந் நிலை அவ்வண்ணமே காணப்படுகின்றது. |

**தலைப்பு 302 - கூட்டுறவு ஊழியர்களின் ஆணைக்குழு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | ---------------------- | -------------------- | ------------------ | --------------------- |
| 1. | 2020 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கிற்கு குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 700,000 ஆகவிருப்பினும் உள்ளவாரான பெறுவனவு ரூபா 638,490 ஆகியமையினால் எல்லை அடையப்படாமை ரூபா 61,510 ஆக காணப்படினும் குறைவான பெறுவனவு எல்லை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எல்லைகள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேவையான சந்தர்ப்பங்களில் அவ் எல்லைகள் உரிய வகையில் திருத்தப்படுவதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்க-ளுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | குறைந்த பெறுவனவு எல்லை திருத்தப்பட்டிருக்க-வில்லை. |
| 2. | 2020 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்களுக்காக 12 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | ஆண்டினுள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்படுவ-தற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தொற்று நிலையினால் நாட்டினுள் எழுந்த வெவ்வேறு பாதகமான நிலைமையினுள் நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடைவதில் தடையான நிலை எழக் கூடும் என்பதனால், | 2020 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடாத்துவதற்கும், 36 ஊழிய புகார்கள்/ மேம்முறையீடுகள் தீர்ப்பதற்கும், ஆலோசனை வழங்கல்கள் 50 மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 03 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும், 11 ஊழிய புகார்கள்/ மேம்முறையீடுகள் தீர்த்தல்களும், ஆலோசனை வழங்கல்கள் 27 மட்டும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | சுகாதார வழிக்காட்டிகளுக்கு அமைவாக காலாண்டு ரீதியான இனங்காணப்பட்ட செயலாற்றல் இலக்குகள் அடைவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | |
| 3. | ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 23 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான பதவியணி 18 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் பதவி வெற்றிடங்கள் 05 காணப்படுகின்றதுடன் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் 2017 நவம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அது இது வரையில் ஆண்டுக்கு ஆண்டு நீடிக்கப்பட்டு வருகின்றது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த நிறுவனத்திலுள்ள வெற்றிடங்கள் ஒருங்கிணைந்த சேவையின் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் என்பதனால் அவ் வெற்றிடங்கள் நிரப்புமாறு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. நிர்வாக உத்தியோகத்த-ரொருவரின் சேவை நிறுவனத்திற்கு | நிறுவனத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்புவதற்காக மேற்கொண்ட கோரிக்கைகளுக்கு இதுவரையில் சாதகமான பதில் பெறப்படவில்லை. ஒப்பநத அடிப்படையில் ஆட்சேர்க்கப்பு செய்யப்பட்டிருந்த நிர்வான உத்தியோகத்தர்களின் ஒப்பந்தக் காலம் முடிவடைந்த காரணத்தினால் அவரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையென்பதனால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினால் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்பு மற்றும் ஒப்பந்த காலம் நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

<u>**தலைப்பு 335 - தேசிய கல்வி ஆணைக்குழு**</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | ----------------------------- | --------------------- | ---------------------- | ------------------------ |
| 1. | 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டம் 3(2) (i) பிரிவு பிரகாரம் ஆணைக்குழு தொடர்ந்து இயங்கும் கூட்டுறவாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், செலவினங்களுக்கான நிதியேற்பாடு ஒதுக்கப்படுதல் மற்றும் விடுமுறை மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளல் மற்றும் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயல்பட வேண்டியமை | திறைசேரியினால் தேசிய கல்வி ஆணைக்குழுவின் கணக்கீடு செயற்பாடுகள் தொடர்பாக 1991 வருடம் முதல் B தரத்திலான திணைக்களமாகவும், 2017 நவம்பர் 14 ஆந் திகதி முதல் A தரத்திலான திணைக்களமாகவும் கவனத்திற் கொண்டு செயல்படுகின்றது. | இது தொடர்பான நிரந்தர முடிவொன்று இது வரையில் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | புகையிரத பயணச் சீட்டு வழங்கல் ஆகிய பிரமாணங்கள் அரச திணைக்கள இயல்பினை ஒத்ததாக இருந்தன. | | | |
| 2. | சட்டத்தின் 10 (1) (ஊ) பிரிவு பிரகாரம் தரவு வங்கியொன்று தாபிப்பதற்கு மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இணங்குகின்றேன். 2020 – 2025 ஐந்தாண்டு திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் தரவு வங்கியொன்று தாபிக்கப்பட்டிருக்க-விலலை. |
| 3. | தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு பிரகாரம் ஆணைக்குழு பரிந்துரை உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று வருடாந்தம் சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க-வில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அதிகாரச் சட்டத்தின் 20 ஆவது பிரிவின் படி அறிக்கையினை மதிப்பிற்குரிய சனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாத-துடன் எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்வேன். | ஆணைக்குழுவின் பரிந்துரை உள்ளடக்கப்பட்ட வருடாந்த அறிக்கையொன்று சனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு 2021 திசெம்பர் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. |
| 4. | ஆணைக்குழுவினால் 1992 ஆம் வருடம் முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கான பிரேரணை அடிப்படையாகக் கொண்டு 1997 வருடம் சனாதிபதியினால் கல்விக் கொள்கையினை பிரகடனப் படுத்தப்பட்டிருப்பினும், அதன் பின்னர் | ஆணைக்-குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைகள் அடிப்படையில் கல்வி கொள்கைக்காக பிரேரணைகள் கொள்கை ரீதியாக பிரகனப்படுத்தல் | இந்த ஆணைக்குழுவின் பணியாகுவது கொள்கை பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு சனாதிபதிக்கு சமர்ப்பிப்பது மட்டுமாவதுடன் அது கொள்கையொன்றாக பிரகடனப்படுத்தல் | நிகழ்காலத்திற்கு பொருந்தும் கல்வி கொள்கையொன்று பிரகடனப்படுத்தப்பட்டிரு-க்கவில்லை. |

| | | |
|---|---|---|
| முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கான பிரேரணைகளை கொள்கை ரீதியான பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக கவனம் செலுத்தப்படல். | மேற்கொள்வது சனாதிபதியினாலாகும். |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 6 | 2018 | 175,065,000 | 58,221,000 | 233,286,000 | 188,000,000 | 143,481,000 | 331,481,000 |
| | 2019 | 223,230,000 | 38,600,000 | 261,830,000 | 222,841,000 | 38,989,000 | 261,830,000 |
| | 2020 | 232,020,000 | 11,700,000 | 243,720,000 | 232,020,000 | 11,700,000 | 243,720,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 6 | 2018 | 183,967,541 | 115,047,379 | 299,014,920 | 4,032,459 | 28,433,621 | 32,466,080 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2019 | 215,524,767 | 34,928,713 | 250,453,480 | 7,316,233 | 4,060,287 | 11,376,520 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 220,553,549 | 10,244,656 | 230,798,205 | 11,466,451 | 1,455,344 | 12,921,795 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 7 | 2018 | 71,683,000 | 1,800,000 | 73,483,000 | 74,509,000 | 2,400,000 | 76,909,000 |
| | 2019 | 76,580,000 | 9,600,000 | 86,180,000 | 91,395,800 | 9,600,000 | 100,995,800 |
| | 2020 | 106,610,000 | 5,450,000 | 112,060,000 | 106,610,000 | 5,450,000 | 112,060,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 7 | 2018 | 68,144,690 | 2,301,653 | 70,446,343 | 6,364,310 | 98,347 | 6,462,657 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2019 | 83,302,928 | 3,187,258 | 86,490,186 | 8,092,872 | 6,412,742 | 14,505,614 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 94,417,966 | 275,250 | 94,693,216 | 12,192,034 | 5,174,750 | 17,366,784 | முனைபழியற்ற அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 8 | 2018 | 94,930,000 | 2,950,000 | 97,880,000 | 117,315,000 | 10,449,000 | 127,764,000 |
| | 2019 | 128,770,000 | 3,700,000 | 132,470,000 | 155,561,000 | 6,905,000 | 162,466,000 |
| | 2020 | 171,790,000 | 5,160,000 | 176,950,000 | 171,790,000 | 5,160,000 | 176,950,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 8 | 2018 | 115,444,941 | 6,480,335 | 121,925,276 | 1,870,059 | 3,968,665 | 5,838,724 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 148,453,554 | 6,175,574 | 154,629,128 | 7,107,446 | 729,426 | 7,836,872 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2020 | 164,825,052 | 4,227,305 | 169,052,357 | 6,964,948 | 932,695 | 7,897,643 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 9 | 2018 | 24,840,000 | 650,000 | 25,490,000 | 26,816,000 | 650,000 | 27,466,000 |
| | 2019 | 27,900,000 | 1,075,000 | 28,975,000 | 28,245,000 | 1,075,000 | 29,320,000 |
| | 2020 | 30,605,000 | 150,000 | 30,755,000 | 30,605,000 | 150,000 | 30,755,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 9 | 2018 | 26,268,933 | 486,875 | 26,755,808 | 547,067 | 163,125 | 710,192 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 27,946,155 | 639,966 | 28,586,121 | 298,845 | 435,034 | 733,879 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 28,546,396 | 43,072 | 28,589,468 | 2,058,604 | 106,928 | 2,165,532 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 10 | 2018 | 441,100,000 | 29,000,000 | 470,100,000 | 452,713,000 | 58,139,000 | 510,852,000 |
| | 2019 | 432,300,000 | 86,000,000 | 518,300,000 | 461,440,000 | 186,000,000 | 647,440,000 |
| | 2020 | 509,576,000 | 30,050,000 | 539,626,000 | 509,576,000 | 30,050,000 | 539,626,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 10 | 2018 | 395,455,878 | 33,923,222 | 429,379,100 | 57,257,122 | 24,215,778 | 81,472,900 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 453,434,452 | 40,188,738 | 493,623,190 | 8,005,548 | 145,811,262 | 153,816,810 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 464,146,755 | 23,318,665 | 487,465,420 | 45,429,244 | 6,731,335 | 52,160,579 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 11 | 2018 | 68,600,000 | 199,800,000 | 268,400,000 | 58,350,000 | 310,950,000 | 369,300,000 |
| | 2019 | 74,910,000 | 119,390,000 | 194,300,000 | 74,910,000 | 119,390,000 | 194,300,000 |
| | 2020 | 79,140,000 | 18,250,000 | 97,390,000 | 79,140,000 | 18,250,000 | 97,390,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 11 | 2018 | 55,984,302 | 217,495,407 | 273,479,709 | 2,365,698 | 93,454,593 | 95,820,291 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 70,609,064 | 113,199,548 | 183,808,612 | 4,300,936 | 6,190,452 | 10,491,388 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2020 | 70,963,603 | 16,008,223 | 86,971,826 | 8,176,397 | 2,241,777 | 10,418,174 | முனைபழியற்ற அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 13 | 2018 | 244,000,000 | 5,100,000 | 249,100,000 | 244,000,000 | 26,165,000 | 270,165,000 |
| | 2019 | 213,400,000 | 14,400,000 | 227,800,000 | 222,064,000 | 21,585,000 | 243,649,000 |
| | 2020 | 216,120,000 | 6,600,000 | 222,720,000 | 215,770,000 | 6,950,000 | 222,720,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 13 | 2018 | 204,481,866 | 22,363,913 | 226,845,779 | 39,518,134 | 3,801,087 | 43,319,221 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 206,890,955 | 14,083,405 | 220,974,360 | 15,173,045 | 7,501,595 | 22,674,640 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 205,589,510 | 3,806,328 | 209,395,838 | 10,180,489 | 3,143,673 | 13,324,162 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 20 | 2018 | 6,206,450,000 | 114,250,000 | 6,320,700,000 | 6,205,605,000 | 115,550,000 | 6,321,155,000 |
| | 2019 | 4,721,580,000 | 122,350,000 | 4,843,930,000 | 4,725,960,000 | 134,470,000 | 4,860,430,000 |
| | 2020 | 10,202,930,000 | 64,000,000 | 10,266,930,000 | 10,187,035,000 | 80,100,000 | 10,267,135,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 20 | 2018 | 4,052,690,214 | 52,569,809 | 4,105,260,023 | 2,152,914,786 | 62,980,191 | 2,215,894,977 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 3,984,049,501 | 124,207,271 | 4,108,256,772 | 741,910,499 | 10,262,729 | 752,173,228 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 7,804,435,568 | 71,283,094 | 7,875,718,662 | 2,382,599,432 | 8,816,906 | 2,391,416,338 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 25 | 2018 | 10,810,000 | 725,000 | 11,535,000 | 14,015,000 | 725,000 | 14,740,000 |
| | 2019 | 15,055,000 | 820,000 | 15,875,000 | 15,055,000 | 820,000 | 15,875,000 |
| | 2020 | 13,230,000 | 80,000 | 13,310,000 | 13,230,000 | 80,000 | 13,310,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 25 | 2018 | 12,786,303 | 570,128 | 13,356,431 | 1,228,697 | 154,872 | 1,383,569 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 12,409,285 | 440,270 | 12,849,555 | 2,645,715 | 379,730 | 3,025,445 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2020 | 12,085,167 | | 12,085,167 | 1,144,833 | 80,000 | 1,224,833 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 302 | 2018 | 16,230,000 | 1,700,000 | 17,930,000 | 16,230,000 | 1,700,000 | 17,930,000 |
| | 2019 | 17,000,000 | 2,000,000 | 19,000,000 | 17,848,000 | 2,000,000 | 19,848,000 |
| | 2020 | 18,370,000 | 630,000 | 19,000,000 | 18,370,000 | 630,000 | 19,000,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 302 | 2018 | 15,708,791 | 1,488,430 | 17,197,221 | 521,209 | 211,570 | 732,779 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2019 | 17,073,244 | 1,110,643 | 18,183,887 | 774,756 | 889,357 | 1,664,113 | முனைபழியற்ற அபிப்பிராயம் |
| | 2020 | 16,180,913 | 127,652 | 16,308,565 | 2,189,087 | 502,348 | 2,691,435 | முனைபழியற்ற அபிப்பிராயம் |

| தலைப்பு | வருடம் | ஆரம்ப நிதியேற்பாடு | | | தேறிய நிதியேற்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் |
| 335 | 2018 | 40,202,000 | 9,250,000 | 49,452,000 | 40,010,000 | 9,470,000 | 49,480,000 |
| | 2019 | 41,370,000 | 9,350,000 | 50,720,000 | 42,733,000 | 9,350,000 | 52,083,000 |
| | 2020 | 40,340,000 | 2,145,000 | 42,485,000 | 40,340,000 | 2,145,000 | 42,485,000 |

| தலைப்பு | வருடம் | உள்ளவாரான செலவினம் | | | சேமிப்பு | | | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதன செலவினம் | மொத்த செலவினம் | |
| 335 | 2018 | 38,473,541 | 7,990,910 | 46,464,451 | 1,536,459 | 1,479,090 | 3,015,549 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2019 | 39,806,234 | 4,553,885 | 44,360,119 | 2,926,766 | 4,796,115 | 7,722,881 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| | 2020 | 38,115,215 | 1,119,582 | 39,234,797 | 2,224,785 | 1,025,418 | 3,250,203 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |